தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை–6
முன்னிலை :திரு.சா. சேதுராம வர்மா
ந.க.எண். 4744 /அ4/இ3/2017, நாள். 04 .02.2017

===

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித்துறை – நேரடி நியமனம் – (Group-IIA Services, Non–Interview posts) 2014–15 மற்றும் 2015– 2016 ம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவியாளர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு தற்காலிக அடிப்படையில் நியமன ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை :
1. அரசாணை (4டி) எண்.18 பள்ளிக் கல்வி (பக 4(2))த்துறை நாள் 28.10.2013
2. அரசாணை (நிலை) எண்.34, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (பி) துறை நாள்.15.04.2015
3. சென்னை–3 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், செயலரின் கடிதம் எண். 7208/PSD-RF-1/2016, நாள்.18/01/2017.

====

2014–15 மற்றும் 2015–16 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்ய (Group-II A Services, Non –Interview posts) தற்காலிக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பார்வை –03 ல் கண்ட கடிதப்படி பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட பணிநாடுநருக்கு அவரது பெயருக்கெதிரில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வகை 12–ன் கீழ் உள்ள உதவியாளர் பணியிடத்தில் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| தேர்வாணையப் பட்டியலின் வரிசை எண்:–236 | | |
|---|---|---|
| பணிநாடுநரின் பதிவு எண், பெயர் மற்றும் முகவரி | நிழற்படம் | நியமனம் வழங்கப்படும் அலுவலகம் / பள்ளி |
| 170712102<br>KARTHIKA S K<br>ATHAPANURKEEL VALAVU<br>KONGANAPURAM- PO<br>EDAPADI- TK<br>SALEM<br>PIN CODE -637 102 |  | DISTRICT ELEMENTARY EDUCATIONAL OFFICE, KRISHNAGIRI. |

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நபர் பணியில் சேரும்போது சிவில்சர்ஜன் தகுதிக்குக் குறையாத தகுதியுடைய மருத்துவ அலுவலரிடம் உரிய படிவத்தில் உடற்தகுதி சான்று பெற்று பணியில் சேரும் போது ஒப்படைக்க வேண்டும் .

அரசாணை எண்.234 நிதி ( ஊதிய பிரிவு) துறை, நாள் 01.06.2009ன் படி இவர் 5200–20200 ( தரஊதியம் ரூ. 2800 ) என்ற ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் மற்றும் இதர படிகள் பெற தகுதியுடையவர் ஆவார்.

... ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் நியமனம் வழங்கப்பட்டுள்ள

நியமனம் செய்யப்படும் இந்நபர் எஸ்.எஸ்.எல்.சி–ல் தமிழை ஒரு பாடமாக பயின்று தேர்ச்சி் பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலைத் தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டாண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

நியமனம் செய்யப்படும் இந்நபர் ஐந்தாண்டுகளுக்கு குறையாமல் பள்ளிக்கல்வித் துறையில் பணிபுரிவேன் என்பதற்கும், இல்லையெனில், பயிற்சிக்காலத்திற்கான ஊதியத்தை திருப்பி செலுத்திவிடுவேன் என்பதற்கும் உறுதி மொழி பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், தற்போது வேறு துறையில் பணி புரிபவராயின் உரிய பணிவிடுவிப்பு சான்று பெற்று பணியில் சேர வேண்டும்.

நியமன ஆணை பெற்ற நபர் பணியில் சேர்ந்தவுடன் அவரது வேலைவாய்ப்பு பதிவு அட்டையை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சரண் செய்யும் பொருட்டு சார்ந்த அலுவலகத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

நியமனம் செய்யப்படும் இப்பணியாளர் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் (Contributory Pension Scheme) கீழ் வைக்கப்படுவார்.

நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்றுகள், சாதிச்சான்று, மற்றும் இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, விதிகளின்படி மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால் தனியருக்கு வழங்கப்பட்ட நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

மாற்றுத்திறனாளிகள் சார்பில் அவர்களது ஊனத்தின் தன்மை மற்றும் சதவீதம் மற்றும் உடல் ஊனம் அவரது பணிக்குப் பாதிப்பை ஏற்படுத்துமா என்பன போன்றவற்றை மாவட்ட மருத்துவ குழு மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

நேரடி நியமனம் மூலம் உதவியாளராக நியமனம் செய்யப்படும் இப்பணியாளர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார். தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும் கீழ்க்கண்ட தேர்வுகளிலும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

1 தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல், 2. பள்ளித்துணை ஆய்வர் தேர்வு (மூன்று தாள்)–
3.சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத்தேர்வு பாகம் –I

தனியரின் விண்ணப்பத்தின் அடிப்படையிலேயே இத்தற்காலிக நியமனம் வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரரின் கோரிக்கை விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளவை ஏதும் பின்னர் தவறு எனக் கண்டறியப்படின் தனியரின் தேர்வு மற்றும் நியமனம் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

இவரது நியமனம், பழங்குடியினருக்கான மாநில கூர்ந்தாய்வுக்குழுவால் (State Level Scrutiny Committee) வழங்கப்படும் சாதி சான்றிதழ் குறித்த இறுதி அறிக்கைக்கு உட்பட்டதாகும்.

நியமனம் பெற்றுள்ள நபரின் கல்விச்சான்றுகள், சாதிச்சான்று மற்றும் இதர ஆவணங்களைச் சரிபார்த்த பின்னரே பணியில் சேர அனுமதிக்க வேண்டும் என்றும், மேற்படி நபர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தொடர்புடைய அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2014–15 மற்றும் 2015–16 Group-II A Services–ன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இவரது பணியை வரன்முறை செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர் :
சம்பந்தப்பட்ட பணிநாடுநர்
நகல்:– சம்பந்தப்பட்ட அலுவலர்கள்.
நகல்:– சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர்.